கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம்,

பெரியகுளம்

ம.சா. 1 நாள் 17 .04.2025

வழக்கு எண் **MCOP No. 160 /2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | A. மாரிமுத்து | ஊர் | : | ஆண்டிப்பட்டி |
| தகப்பனார் பெயர் | : | அடைக்கல நாடார் | தாலுகா | : | ஆண்டிப்பட்டி |
| தொழில் | : | கூலி | வயது | : | 64/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் 1 ம் சாட்சி முதல் விசாரணை</u>**

நான், இந்த வழக்கில் 1 ஆம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பில் 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிருபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். விபத்து சம்பந்தமாக திருநெல்வேலி மாவட்டம் புளியரை காவல்நிலையத்தில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.1**, எனது மகன் பாண்டிஸ்வரனின் இறப்பு சான்றிதழ் **ம.சா.ஆ, 2**,பிரேத பரிசோதனை அறிக்கை **ம.சா.ஆ. 3** ஆகும். விபத்தை ஏற்படுத்திய TN 29 BH 1980 சரக்கு வாகனத்தின்

மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **ம.சா.ஆ 4**.

TN 55 AU 4744 காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **ம.சா.ஆ. 5.**

எனது மகனின் ஓட்டுநர் உரிமம் **ம.சா.ஆ. 6**. விபத்தை ஏற்படுத்திய சரக்கு வாகனத்தின் பாளிசி நகல் **ம.சா.ஆ. 7**.

எனது மகனின் சம்பள சான்றிதழ் **ம.சா.ஆ. 8.**

எனது மற்றும் 2 ,3 மனுதாரர்களின் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை நகல் **ம.சா.ஆ. 9**. புளியறை காவல் நிலைய குற்ற எண் 237/19 தாக்கல் செய்த மாதிரி வரைபடம் **ம.சா.ஆ, 10.**

**முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.